**தவலம பிரதேச சபை - 2023**

-------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தவலம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தவலம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த திறன்தொழில் மற்றும் கைத்தொழில் வரி வருமானம் ரூபா 195,320 தொகை மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 715,713 தொகை பெறுமதியான நீர் பவுசர் நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

| | | |
|---|---|---|
| (இ) முன்னைய ஆண்டின் நிலையான சொத்துக் கணக்கின் மீதி மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கிடையே ரூபா 92,879 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 153,788 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 166,340 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) நிரந்தர பதவியணியின் சம்பளச் செலவு ரூபா 155,906 தொகை மிகையாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) முன்னைய ஆண்டு தொடர்பாக ஓபாத வொலிபோல் விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 147,000 இற்கான தடுத்து வைத்தல் பணத்திற்காக கடன்பட்டோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மற்றும் துணைப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 289,236 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டம் | | | |
| (i) பிரிவு 17(3) | சபைக்கு சொந்தமான 31 காணிகள் விளைவற்றுக் காணப்பட்டது. | கிணறுகள் காணப்பட்ட அனேக காணிகள் சிறிய காணித் துண்டாக காணப்பட்டமையால் அவற்றை ஏனைய கருமங்களுக்காக பயன்படுத்த முடியாது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமான பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 134(1) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் முன்னேற்றப்பட்ட இடங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்தல் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடத்திற்கு ஒருமுறை பரிசோதனை மேற்கொண்டு அறிவித்திருக்கவில்லை. | காணிகள் கட்டிடங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என. | விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) தென் மாகாண சபை நிதி விதி 476 மற்றும் 477 | வாகனங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருடாந்த வாகனக் கணிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) தென் மாகாண பிரதான செயலாளரின் 2018 மே 22 திகதிய SS/03/12/05 கொண்ட சுற்றறிக்கை | பெறுமதிகள் தொடர்பாக தகவல்கள் காணப்படாத சபை வளவில் நிறுத்தப்பட்டிருக்கும் சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட இரும்பு உருளை 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் இதனை திருத்த வேலை | பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு அந்த இரும்பு உருளை ஏல விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் இன்றும் சபையில் நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2007 மார்ச் 19 திகதிய தபச/5 இலக்கங் கொண்ட அறிவுரைக் கடிதம் | சபைக்கு சொந்தமான 42 காணிகளுக்காக எல்லை வேலிகள் போடப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் எல்லை வேலிகள் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணிகளுக்காக எல்லை வேலிகள் போடப்பட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 324,491 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,258,333 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 639,840 | 666,734 | 716,150 | 252,252 | 613,199 | 463,328 | 680,492 | 301,668 |
| வாடகை | 4,162,190 | 2,011,045 | 2,144,711 | 118,491 | 2,465,000 | 1,572,140 | 1,563,333 | 252,157 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 395,780 | 541,969 | 541,969 | 8,800 | 489,080 | 260,156 | 260,156 | 8,800 |
| ஏனைய வருமானங்கள் | 2,236,500 | 4,658,677 | 4,658,677 | 6,000 | 16,351,864 | 12,304,353 | 12,304,353 | 6,000 |
| | 7,434,310 | 7,878,425 | 8,061,507 | 385,543 | 19,919,143 | 14,599,977 | 14,808,334 | 568,625 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 568,625 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 7,878,425 தொகையாக இருந்தது. அதன் படி ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 8,447,050 தொகையாக காணப்பட்டதுடன், அறவீடுகள் ரூபா 8,061,507 தொகையாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 385,543 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | காணிகள் தொடர்பான கணிப்பீட்டின் பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதியில் ரூபா 63,120 தொகை பெறுமதியான 03 வருடங்களை கடந்துள்ள 116 மீதிகள் அடங்கியிருந்தது. | காணிகள் கணிப்பீடு மேற்கொண்ட பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீண்ட காலமாக நிலுவையாக காணப்படும் மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 116,584 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 11,222 தொகை காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் அறவீடு செய்ய வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தகவல்கள் வாகன சம்பவக் குறிப்பேட்டில் பதிவு செய்திருக்காததுடன் அந்த பரிசோதனை அறிக்கைகள் சபையிலும் காணப்படாமையால் எரிபொருள் எரிவின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தாமல் 2023 ஆண்டில் 05 வாகனங்களுக்காக ரூபா 2,291,770 தொகை பெறுமதியான எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | எரிபொருள் எரிவினை உறுதிப்படுத்தி வாகனங்களுக்கான எரிபொருள் வழங்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி விளக்கு பராமரிப்புக்காக ரூபா 244,186 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வீதி விளக்குகள் பராமரிப்பு அலுவல்களின் மேற்பார்வை தொடர்பான எழுத்துமூல அறிக்கைகள் வைத்திருத்தலொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கண்காணிப்பு தொடர்பான பதிவேடு தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுகின்றது என. | கண்காணிப்பு காலரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 63 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்காமையால் அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 283,500 தொகை மற்றும் பரிசோதனைக் கட்டணமாக ரூபா 189,000 தொகை சபை அறவிட்டிருக்கவில்லை என காணக்கூடியதாக இருந்தது. | எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 464,634 தொகை பெறுமதியான 41 காணிகள் தொடர்பாக காணி உறுதிகள் சபையிடம் காணப்படாததுடன் அந்த காணிகளை உரித்தாக்கி உரிமையினை தீர்த்துக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவின் மூலம் இந்த காணிகள் சபைக்கு சொந்தமானவையா அல்லவா என இனங்கண்டு அந்தக் காணிகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்குச் சொந்தமான காணிகளை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பரிசோதனை செய்த போது 08 காணிகளின் பெறுமதியை கண்டறிய முடியாதிருந்ததுடன், 42 காணிகள் தொடர்பாக தற்போதைய சந்தைப் பெறுமதியை இனங்கண்டு ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2014 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 6,390,000 தொகை கிரயத்தையுடைய கப் வண்டியினை பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2022 மே 09 திகதி | கப் வண்டியின் காப்புறுதி நட்டஈடு கிடைத்தல் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | காப்புறுதி நட்டஈடு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்ற கொண்டாட்டம் ஒன்றில் பங்குபற்றிவிட்டு வரும் போது ஒருசாராரினால் கப் வண்டியை முழுமையாக சேதப்படுத்தி இருந்தமையால் அதற்கான காப்புறுதி நட்டஈடு கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | 2014 ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 2,655,318 தொகை பெறுமதியான foton டிரக்டர் வண்டியின் இன்ஜின் செயற்படாமையால் 2016 ஆண்டு முதல் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன் இந்த வாகனம் 1000 கி.மீ. இற்கு குறைவான எண்ணிக்கையே ஓடியிருந்தது. | பராமரிப்பு அலுவல்கள் தாமதமடைவதற்கு பிரதானமான காரணம் சபை நிதியம் போதியளவாக காணப்படாமையாகும் என. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 வீதிகளை அபிவிருத்தி நிர்மாண வேலைகளுக்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2023 ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் அறிமுகப்படுத்தியிருந்த (ஆகஸ்ட்) ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ரேட்களை பயன்படுத்தாமையால் ரூபா 371,728 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் 3/9/7 மற்றும் 2023 நவம்பர் 17 திகதிக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்றிருந்த 11 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 27,111 இற்கான கடன்மீதியொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் மீதிகள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயாக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 ஏற்பாடுகள் மற்றும் உள்ளுராட்சி ஆணையாளரின் (தெ.மா) 2014 பெப்ரவரி 24 திகதிய தபப/யஹ/01/நா.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு கடமைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 தடவைகள் நடாத்தியிருந்த போதிலும், தீர்மானங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சில தீர்மானங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய தீர்மானங்கள் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |